1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கண்மாய் மராமத்து மற்றும் கலிங்கு கட்டுவதற்காக அரசு ரூ. 4.10 இலட்சம் அனுமதியளித்திருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு வெள்ளம் வந்து இந்தக் கண்மாயினுடைய கலிங்கு, மற்றும் கரை எல்லாம் உடைத்துச் செல்லப்பட்டது. உள்ளாட்சித்துறை அதிகாரிகளிடம் இதைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னபொழுது, இது பொதுப்பணித்துறை கண்மாய் என்று சொல்கிறார்கள். பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் சொல்லியபொழுது, இது உள்ளாட்சித்துறை கண்மாய் என்று சொல்கிறார்கள். இப்படி 8 வருஷமாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் நான் முறையிட்டிருக்கிறேன. ஆதலால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருங்காலத்திலாவது இந்தத் தவறுகள் நடவாதவண்ணம், இனிமேல் ஏதாவது சேதம் அடைந்தால், உடனடியாக மராமத்து பார்க்க வேண்டிய காரியங்களைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலும், பொதுப் பணித்துறையின் சார்பிலும் பல்வேறு கண்மாய்கள் மராமத்து செய்யப்படுகின்றன. 110 ஏக்கர்களுக்கு மேலே பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய்களாக இருந்தால் அவை பொதுப்பணித் துறையின் சார்பிலும், 100 ஏக்கர்களுக்குக் குறைவாக பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய்களாக இருந்தால் அவை ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலும் பராமரிக்கப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட கண்மாய் 76 ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடியது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் சார்பிலே பராமரிப்பு செய்யப்பட வேண்டுமென்று அரசாணையிடப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலே ரூ. 4.10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உரிய காலத்திலே வேலைகள் சீக்கிரமாக நடத்தப்படும்.

தகட்டூரில் பணியார் விடுதி கட்ட வேண்டுமென்பதற்கான கோரிக்கை.

(*120—வினா 17020—திரு.எம்.எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் தாலூகா தகட்டூரில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணியர் விடுதிக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தகட்டூரிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் வேதாரண்யத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின்கீழ் ஒரு பயணியர் விடுதியும், மற்றும் தகட்டூரில் இருந்து 17 கி.மீ. தூரத்தில் திருத்துறைப் பூண்டியில் பொதுப்பணித்துறையின் பராமரிப்பின்கீழ் ஒரு ஆய்வு விடுதியும் உள்ளன. எனவே, தற்பொழுது தகட்டூரில் உடனடியாக பயணியர் விடுதி கட்ட வேண்டிய அவசியமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிலக்கோட்டை வட்டம் மெட்டூர் கேட் இரயில்வே லயினுக்கு அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம்.

(*121—வினா 19937)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் மெட்டூர் கேட் இரயில்வே லையனுக்கு அருகில் போக்குவரத்திற்காக சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இவ்விடத்தில் சுரங்கப்பாதைக்குப் பதிலாக ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) திட்டத்தின் மதிப்பீடு ரூ. 46.442 இலட்சம்.

(இ) ரயில்வே மேம்பாலத்தின் இரு பக்கங்களிலுள்ள அணுகு சாலைகளின் நில உரிமை பெறுவதற்கான மதிப்பீட்டிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கு இரயில்வே வாரியத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. நில உரிமை பெறல் முடிந்தவுடன் மேம்பாலம் மற்றும் அணுகு சாலைகள் மதிப்பீட்டிற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு சாலை வேலை தேசீய நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டு, மேம்பாலப் பகுதி ரயில்வே துறையினரால் நிறைவேற்றப்படும்.